முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1607

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**22.02.2024**, வியாழக்கிழமை

1. அவதார ஞானியே அரங்கா
அறம் காத்து வருகின்ற தேசிகா
புவனத்தை ஆளவந்த குருராஜா
புண்ணியனே ஆறுமுகன் என் அவதார அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் மாசி மாதம் 10 ம் நாள், 22.02.2024, வியாழக்கிழமை)
வரமென அரங்கன் உமக்கு நித்தம் நித்தம்
வல்லமைபட சக்தி வழங்கி வருகின்றேன்
3. வருகவே உமை நோக்கி கலியுக மக்கள் ஒன்றிணைந்து
ஓங்காரக்குடில் நோக்கி வந்தால் போதும்
பெருமைமிக்க ஞான உலக மாற்றம்
பிரணவக்குடில் சக்தி உலகை ஆளுகின்ற வண்ணம்
4. வண்ணமுடன் நிலைகள் உயர்ந்து
வருங்காலம் ஞானசித்தர் காலமாக
காலமதும் ஞானிகள் நிரம்பிய
கலியுகத்தில் ஞானிகளுடைய ஆட்சிக்காலமாக மாற்றம் பெறும்
5. மாற்றத்தை தரும் மாதவசி அரங்கனே
மண்ணுலகை மீட்க வந்த ஞானியாகும்
ஞானியரின் உண்மை வழிகளை
நம்பிக்கை கொண்டு உலகோர் ஏற்று வந்தால்
6. தானதர்மம் பெருகுவதோடு
தரணி எங்கும் ஞானிகள் படை நிரம்பிய
ஞானவான்கள் கூட்டமாக மிகுந்து மிகுந்துமே
ஞான ஆட்சிக் காலம்

7. நாட்டிடுவேன் அரங்கன் தயவாலே சடுதி கண்டு
இந்த பேருலகம் தமிழகம் தொட்டு தரணி எங்கும்
தக்க மாற்றம் இனிதே நடந்தேறும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–